சிவ சிவ சிவ

நிகழ்ச்சி நிரல்

நாள்	நேரம்	நிகழ்ச்சிகள்
ஆனி மாதம் 21ம் தேதி 05-07-2024 வெள்ளிக்கிழமை	காலை 6.35 மணிக்கு	தேவதா அனுக்ஞை, யஜமான அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை புண்யாகவாஜனம், கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லக்ஷ்மி ஹோமம், தன பூஜை, தீர்த்த சங்கரஹனம்
	மாலை 04.15 மணிக்கு மேல்	வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்பலங்காரம், சுவாமி கலாகர்ஷணம், யாத்ரா தானம், கும்பங்கள் யாகசாலை பிரவேசம், முதல்கால யாகம், பூர்ணாஹுதி, ஷோடசோபசார தீபாராதனை
ஆனி மாதம் 22ம் தேதி 06-07-2024 சனிக்கிழமை	காலை 8.35 மணிக்கு மேல்	இரண்டாம் கால யாகசாலை பூஜை, விசேஷ சந்தி, கோ பூஜை, சுவாசினி பூஜை, பிரம்மசாரி பூஜை, கன்னிகா பூஜை, பாவனாபிஷேகம், பூர்ணாஹுதி, ஷோடசோபசார தீபாராதனை, யந்திரஸ்தாபனம், அஷ்பந்தன மருந்து சாத்துதல்
	மாலை 4.30 மணிக்கு	மூன்றாம் கால யாகசாலை பூஜை, பாவனாபிஷேகம், ஷண்ணவதி ஹோமம், பிம்பசுத்தி, நாடிசந்தானம், ஷோடசோபசார தீபாராதனை,
ஆனி மாதம் 23ம் தேதி 07-07-2024 ஞாயிற்றுக்கிழமை	அதிகாலை 4.30 மணிக்கு	நான்காம் கால யாக சாலை பூஜை, பூர்ணாஹுதி தீபாராதனை, யாத்ரா தானம், கடம் புறப்படுதல்
	காலை 5.45	அருள்தரும் **ஸ்ரீ ஆவுடையம்பாள் உடனுறை அருள்மிகு ஸ்ரீநரசிங்கநாதர்** மற்றும் **ஸ்ரீபரிவார தெய்வங்களுக்கு மஹா கும்பாபிஷேகம், தீபாராதனை**
	காலை 8.00 மணிக்கு மேல்	திருவாசக சித்தர், திருக்கழுக்குன்றம், **சிவதாமோதரன் ஐயா** அவர்கள் திருவாசக முற்றோதுதல்
	மதியம் 1.00 மணிக்கு	**அன்னதானம்**
	மாலை 5.05 மணிக்கு மேல்	மஹாபிஷேகம்
	மாலை 7.00 மணிக்கு	திருக்கல்யாணம்
	இரவு 10.00 மணிக்கு	சுவாமி, அம்பாள், விநாயகர் திருவீதி உலா

தல வரலாறும் சிறப்பும்

மூலவர்	: **ஸ்ரீ நரசிங்க நாத**
அம்பாள்	: **ஸ்ரீ ஆவடைய நாறகி அம்பாள்**
உற்சவர்	: ஸ்ரீ சோமஸ்கந்தர் , ஸ்ரீ ஆவடைற நாயகி , ஸ்ரீ விநாயகர்
தல விருட்சகம்	: வில்வம்
தீர்த்தம்	: சரப தீர்த்தம்
பழமை	: 800 வருடங்கள் பழமை வாய்ந்தது

ஸ்தல புராணம்

ஸ்ரீ நரசிம்மா சரப தீர்த்தத்தில் நீராடி சிவபெருமானை பூஜை செய்தார் என்பது இத்தலபுராண வரலாறு.ஸ்ரீ நரசிம்மா சிவனை பூஜித்த காரணத்தினால் ஸ்ரீ நரசிங்கநாத ஈஸ்வரர் என்ற திருநாமம் வழங்கப்படுகிறது.

வீரபாண்டியன் கல்வெட்டுச் செய்தி

இத்திருக்கோவிலில் மொத்தம் ஏழு கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றைத் தவிரதரைப் பகுதியிலும் சில கல்வெட்முக்கள் உள்ளன். இவற்றுள் பழமையானது வீரபாண்டியன் என்ற பாண்டிய மன்னனுடைய கல்வெட்டாகும். இம்மன்னன் 13ம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆட்சி செய்தார். அவருடைய 5வது ஆட்சியாண்டு கல்வெட்டு இக்கோயிலினுடையமகா மண்டபத்து வடபுறச் சுவரில் காணப்படுகிறது. இக்கல்வெட்டு இவ்வூரினை **"குடநாட்டு வைகுண்டமபன மதுரோதய பெருந்தெரு"** எனக் குறிப்பிடுகிறது. இறைவன் பெயரை நரசிங்க ஈஸ்வரமுடைய நாயனார் எனக் குறிப்பிடுகின்றது.

சுந்தரபாண்டியன் கல்வெட்டுச் செய்தி

மகா மண்டபத்தில் வடபுறச் சுவரில் சுந்தரபாண்டியன் என்ற மன்னனின் நாலாவது ஆட்சியாண்டில் கல்வெட்டு பொற்க்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டில் முதல் முதலாக இவ்வூர் **"குடநாட்டு அங்கமங்கலம்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்பணி நடைபெற்ற செய்தி

அம்மன் கோயில்ல் உள்ள கல்வெட்டு (வடக்குச்சுவர்) சகாப்பதம் 1317ல் பொறிக்கப்பட்டுள்ளது.இக்கல்வெட்டு பல சிறப்பான செய்தியினை நமக்குத் தருகின்றன. கொல்லம் 601-ம் ஆண்டு நாளில்ஞாயிற்று 15-ல் பூர்வபட்டத்து சோமாவாரமும் வியாகரயோகமும் பெற்ற உத்திராடத்து நாளில்நரசிங்க ஈஸ்வரமுடைய நாறனார் கோயிலிள் திருப்பணியும், மகர சிரார்த்தையும் நடத்தி வைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திருக்கோயில் சுமார் 800 ஆண்டுகள் பழமையும் மேற்கு நோக்கிய சிவாலயம் என்ற சிறப்பும் பெற்றது.இந்த திருக்கோவிலில் முற்றிலும் கற்கோவிலாக முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் (கி.பி 1216-1236) கட்டப்பட்டது.

ஆலய சந்நிதிகள்

ஸ்ரீ நரசிங்க நாத ஈஸ்வரர்



ஸ்ரீ ஆவுடையம்பாள்

ஸ்ரீ நந்தி

ஸ்ரீ துவார பாலகர்கள்

பலி பீடம்

முகப்பு மண்டபத்திற்கு முன்னால் பலிபீடம் உள்ளது.
சோழர் கால கட்டடக் கலைநயத்துடன் அமைந்துள்ளது.

ஸ்ரீ கன்னிமூல
விநாயகர்

ஸ்ரீ சுப்பிரமணியர்

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி சந்நிதி வடக்குப்பகுதிக்கு இடையில் அமைந்துள்ளது. ஸ்ரீ சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை சமேதராய் அருள்பாலிக்கிறார்

ஸ்ரீ சண்டிகேஸ்வரர்

ஸ்ரீ நரசிங்கநாத ஈஸ்வரர் மூலஸ்தானத்தின் வடக்குப் பகுதியில் சண்டிகேஸ்வரர் சந்நிதி உள்ளது

ஸ்ரீ சனீஸ்வர பகவான்

கரக வாகனத்துடன் தெற்கு நோக்கி அருள்புரியும் இவரை சனிக்கிழமைகளில் தீபமேற்றி வழிபடுகின்றனர் பக்தர்கள்

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

கருவறையின் தெற்கு சுவர் மாடத்தில் அருள்பாலிக்கும் குரு தட்சிணாமூர்த்திக்கு வியாழக்கிழமைகளில் முல்லைப்பூ மாலை, கொண்டைக்கடலை மாலை சாத்தி வழிபடுகின்றனர் பக்தர்கள்

ஸ்ரீ சூரியன்

இரு கரங்களிலும் செந்தாமரை மலர் ஏந்தி மேற்கு பார்த்து நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார்

ஆலய சீர்மைகள்

ஸ்ரீ சுரதேவர்

மூன்று தலைகள், மூன்று கால்கள், மூன்று கைகளுடன் இம்மூர்த்தி கையில் கண்டம், மணி சூலத்துடன் காட்சி தருகின்றார். எவருக்கேனும் சுரம் இருப்பின், இம்மூர்த்திக்கு மிளகு அரைத்து சார்த்தி வெந்நீரால் அபிஷேகம் செய்தால் தீரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

ஸ்ரீ கால பைரவர்

நின்ற கோலத்தில் தெற்கு நோக்கி அருள் பாலிக்கிறார். கால பைரவர் ஐப்பசி மாதத்தில் வரும் தேய்பிறை அஷ்டமி தினத்தில் அவதரித்தார் என்பதால், ஒவ்வொரு மாதமும் வரும் தேய்பிறை அஷ்டமி திதியில் ராகு நேரத்தில் மிளகு தீபம் ஏற்றி வழிபடுவது மிகச் சிறப்பாகும். இந்த ஆலயத்தில் உள்ள கால பைரவர் நோய்கள் பலவற்றை தீர்க்கும் வல்லமை கொண்டவராக இருக்கிறார். தீராத வியாதியால் அவதிப்படுபவர்கள், இத்தல கால பைரவருக்கு 9 வாரம் தொடர்ச்சியாக மிளகு தீபம் ஏற்றி வழிபட்டு வந்தால் சர்வ வியாதியும் குணமாகும்.

22-10-2003ல் ஸ்ரீ ஆவுடையம்பாள் திருக்கல்யாண நடைபெற்ற காட்சி

உற்சவர்

புதுப்பிக்கும் முன்பு பழைய கோபுரம்

உ

திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலையத்துறை

தூத்துக்குடி மாவட்டம், அங்கமங்கலம் (குரும்பூர்)

அருள்தரும் ஸ்ரீ ஆவுடையம்பாள்,
அருள்மிகு ஸ்ரீநரசிங்கநாதர் திருக்கோவில்

(மேற்கு நோக்கிய சிவஸ்தலம்)

ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

மஹா கும்பாபிஷேக அழைப்பிதழ்

ஸ்ரீ நரசிங்க நாதர் ஸ்ரீ ஆவுடையம்பாள்

நாள் : 07-07-2024, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 5.45 மணிக்கு மேல் 6.45 மணிக்குள்